**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.105/2024 தேதி- 26.03.2026
(PW.1) – ஜாய்ஸ் மெட்டில்டா

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் நான் அப்பாட்டுவிளையில் அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். நான் வசித்து வரும் வீடு வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 15 முதல் 20 கி.மீ தொலைவில் உள்ளது. நான் வேலை ஏதாவது செய்து வருகிறேனா என்றால் இல்லை. முன்பு ஏதாவது வேலை செய்து வந்தேனா என்றால் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வந்தேன்.

2. பிரதிவாதி என்னுடைய கணவரின் அம்மா என்றால் சரிதான். என் கணவர் உயிரோடு இருந்த சமயத்தில் இருந்தே என் அம்மா வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் இரண்டு வீட்டிலும் மாறி மாறி வசித்து வந்தேன். எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 16.05.2008 ல் நடைபெற்றது. என்னுடைய ஆவணங்களில் அனைத்து வீட்டு முகவரியும் அப்பட்டுவிளையில் உள்ள அம்மாவின் வீட்டு முகவரி தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு என் கணவருக்கு கிடைத்தது என்றால் பணம் செலுத்தி செட்டில்மென்ட் ஆவணம் மூலமாக கிடைத்தது. வழக்கு பட்டிகை சொத்துகளோடு சேர்த்து என் கணவரின் குடும்ப சொத்தும் உள்ளது என்றால் சரிதான்.வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் என்ன என்றால் 5 சென்ட் ஆனால் சர்வே எண் தெரியாது. என் கணவருக்கு வழக்கு பட்டிகை சொத்தை அவரின் அப்பாவான அந்தோணி முத்து செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

4. அந்தோணி முத்து நாடார் 1994 யிலேயே வாங்கினார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்தோணி முத்து நாடாரும், அவரது மனைவியான பிரதிவாதியும் சேர்ந்து மொத்த விஸ்தீரணமான 18 சென்ட் சொத்தை 1994 யில் விலைக்கு வாங்கினார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன

சொத்தில் இருந்து தான் அனைத்து பிள்ளைகளுக்கும் பாகம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் பணம் செலுத்தாமல் குடும்ப சொத்து என்பதால் செட்டில்மென்ட் ஆவணம் மூலம் கிடைத்த சொத்தை என்னுடைய நகையை வைத்து அதில் பெற்ற பணத்தின் மூலம் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

5. என் கணவர் எப்போது இறந்தார் என்றால் 2016 ல் இறந்தார். நான் கிறிஸ்தவ மதத்தை தழுவிகிறேன் என்றால் சரிதான். எனக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். என் கணவர் எங்கு வைத்து இறந்தார் என்றால் வெளிநாட்டில் வைத்து இறந்தார். வாரிசு சான்றிதழ் பெற யார் விண்ணப்பித்தார் என்றால் நான் தான் விண்ணப்பித்தேன். வாரிசு சான்றிதழ் அரசால் முறைப்படி வழங்கப்பட்டது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழில் வாரிசாக என்பெயரும் , என் கணவரின் அம்மாவின் பெயரும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. என் கணவர் இறந்து எத்தனை வருடங்கள் கழித்து வாரிசு சான்றிதழ் பெற விண்ணப்பித்தேன் என்றால் இரண்டு ஆண்டிற்குள் விண்ணப்பித்துவிட்டேன். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 ஆவணமான வாரிசு சான்றிதழில் 16.02.2022 ஆம் தேதியில் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக என் கணவர் இறந்து இரண்டு ஆண்டிற்குள் வாரிசு சான்றிதழ் பெற்றுவிட்டேன் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

7.பொதுவாக இறந்த நபரின் உரிமைப்பட்ட நபருக்கு தான் வாரிசு சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு அரசால் வழங்கப்பட்ட சான்றிதழ் எனக்கும் பொருந்தும் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து குடும்ப சொத்து என்பதால் அதில் தனிப்பட்ட முறையில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.